பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
23 07 2024 **TUESDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உற்பத்தி, வேலைவாய்ப்பு, சமூகநீதி உள்ளிட்ட ஒன்பது அம்சங்களுக்கு பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

2. பொருளாதாரம் சீராக உள்ளதாகவும், பணவீக்கம் கட்டுக்குள் இருப்பதாகவும் மத்திய பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. ஏழை மக்களுக்கு வழங்கப்படும் இலவச உணவு தானிய திட்டம் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிப்பு, தங்கம், வெள்ளி, பிளாட்டினத்திற்கான சுங்கவரி குறைப்பு, புற்றுநோய் சிகிச்சைக்கான மூன்று மருந்துகளுக்கான சுங்கவரி ரத்து போன்ற அறிவிப்புகளும் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளன.

4. வணிகர்களின் நலனுக்கான பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. ஆசிய கோப்பை மகளிர் டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

>>>><<<<

உற்பத்தி, வேலைவாய்ப்பு, சமூகநீதி, நகர்ப்புற வளர்ச்சி, எரிசக்தி பாதுகாப்பு, கட்டமைப்பு மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகள் உள்ளிட்ட ஒன்பது அம்சங்களுக்கு பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட்டை இன்று மக்களவையில் தாக்கல் செய்து அவர் உரையாற்றினார்.

சர்வதேச அளவில் பொருளாதாரம் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு வரும் வேளையிலும் நமது பொருளாதாரம் சீராக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, பணவீக்கமும் கட்டுக்குள் இருப்பதாக அவர் கூறினார்.

ஏழை மக்களுக்கு வழங்கப்படும் இலவச உணவு தானிய திட்டம் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்படுவதாக அவர் அறிவித்தார்.

இதன் மூலம் 80 கோடி பேர் பயனடைவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் 4 கோடி இளையோருக்கு வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதற்கென சிறப்பு திட்டம், 2 லட்சம் கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

ஒரு கோடி விவசாயிகள் அடுத்த இரண்டாண்டுகளில் இயற்கை வேளாண் முறைக்கு மாறுவதற்கு ஊக்கமளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க உத்வேகம் அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக ஒரு லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசுகளோடு இணைந்து வேளாண் வளர்ச்சிக்கான டிஜிட்டல் பொது கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்

ஒட்டுமொத்த வளர்ச்சிக்கென தேசிய கூட்டுறவு கொள்கை அறிவிக்கப்படும்

ஊரக பொருளாதாரம் விரைவுபடுத்தப்படும்

புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்

உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயில்வதற்கு 10 லட்சம் ரூபாய் வரை கடனுதவி வழங்கப்படும்

பணிபுரியும் மகளிருக்கென விடுதிகள் ஏற்படுத்தப்படும்

எந்தவொரு பருவநிலையையும் எதிர்கொள்ளும் வகையில் 109 உயர் விளைச்சலுக்கு வகை செய்யும் விதைகள் அறிமுகப்படுத்தப்படும்

கிழக்கு மண்டலங்களின் மேம்பாட்டிற்கென தொழில் வழித்தடம் ஏற்படுத்தப்படும்

பீகார், ஜார்கண்ட், மேற்குவங்கம், ஒடிசா மற்றும் ஆந்திரப்பிரதேசத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கென திட்டம் வகுக்கப்படும்

ஆந்திரப்பிரதேச விவசாயிகளின் வாழ்வாதார திட்டமான போலாவரம் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற உரிய நிதி வழங்கப்படும்

கடனை முறையாக திருப்பிச் செலுத்திய முத்ரா திட்டப் பயனாளிகளுக்கான கடனுதவி உச்சவரம்பு 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்

அஞ்சலக வங்கி சேவை வடகிழக்கு மாநிலங்களில் விரிவுபடுத்தப்படும்

500 முன்னணி நிறுவனங்களில் ஒரு கோடி இளையோர் தொழில் பழகுநர் பயிற்சி பெறுவதற்கான ஒருங்கிணைந்த திட்டம் அறிவிக்கப்படும்

பிரதமரின் வீட்டுவசதி திட்டத்திற்கு 10 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

பீகாரில் நெடுஞ்சாலைத் திட்டங்களை மேம்படுத்துவதற்காக 20 ஆயிரம் கோடி ரூபாயும், பாசன வசதி மற்றும் வெள்ள மேலாண்மை திட்டங்களுக்காக 11 ஆயிரத்து 500 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

நாடுமுழுவதும் 100 நகரங்களில் தொழில் பூங்காக்கள் ஏற்படுத்தப்படும்

மகளிர் மற்றும் பெண் குழந்தைகளின் நலனுக்கு 3 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

பிரதமரின் கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் நான்காவது கட்டமாக செயல்படுத்தப்படும்

கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 11 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்

எரிசக்தி மாற்றத்திற்கான கொள்கை ஆவணம் வெளியிடப்படும்

பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் வகையில், அடுத்த தலைமுறை சீர்திருத்த நடவடிக்கைகளுக்கான கொள்கை வகுக்கப்படும்

நாடுமுழுவதும் 63 ஆயிரம் கிராமங்களில் 5 கோடி பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கென திட்டம் அறிமுகப்படுத்தப்படும்

சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படும்

ஆராய்ச்சிப் பணிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் தேசிய ஆராய்ச்சி நிதியம் ஏற்படுத்தப்படும்

புற்றுநோயால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் மூன்று மருந்துகளுக்கான சுங்கவரி ரத்து செய்யப்படும்

தங்கம் மற்றும் வெள்ளிக்கான சுங்கவரி 15 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகவும், பிளாட்டினத்திற்கான சுங்கவரி 6 புள்ளி நான்கு சதவீதமாகவும் குறைக்கப்படும்

வெளிநாட்டு நிறுவனங்களுக்கான கார்ப்பரேட் வரி 40-லிருந்து 35 சதவீதமாக குறைக்கப்படும்

குறிப்பிட்ட தொலைத்தொடர்பு கருவிகளுக்கான சுங்கவரியும் 15லிருந்து 10 சதவீதமாக குறைக்கப்படும்

போன்ற அறிவிப்புகளையும் திருமதி. நிர்மலா சீதாராமன் வெளியிட்டார்.

தனிநபர் வருமான வரியை பொறுத்தவரை இரண்டு அறிவிப்புகளையும் அமைச்சர் வெளியிட்டார்.

இதன்படி, புதிய வரி கணக்கு தாக்கல் செய்யும் திட்டத்தின் கீழ், நிரந்தரக் கழிவு 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் கீழ் 3 லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு வரி கிடையாது என்றும் அவர் அறிவித்தார்.

7 லட்சம் ரூபாய் வரை 5 சதவீதமும், 10 லட்சம் ரூபாய்வரை 10 சதவீதமும், 12 லட்சம் ரூபாய் வரை 15 சதவீதமும், 12 முதல் 15 லட்சம் ரூபாய் வரை 20 சதவீதமும், 15 லட்சத்திற்கும் கூடுதலாக வருமானம் உள்ளவர்களுக்கு 30 சதவீதமும் வரி விதிக்கப்படும் என்று திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

முன்னதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மத்திய பட்ஜெட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்கு முன், பாரம்பரிய முறைப்படி குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை சந்தித்து பேசினார்.

>>>><<<<

தேசிய ஒலிபரப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1927ஆம் ஆண்டு மும்பையில் முதலாவது வானொலி ஒலிபரப்பு தொடங்கியதை குறிக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, 1931ஆம் ஆண்டு அகில இந்திய வானொலி உருவானது.

1956ஆம் ஆண்டு ஆகாஷ்வாணி என பெயர் மாற்றம் செய்யப்பட்ட வானொலி ஒலிபரப்பு, தற்போது 98 சதவீத மக்களை சென்றடைகிறது.

23 மாநில மொழிகளில் 591 வானொலி நிலையங்கள் ஒலிபரப்பு சேவையை வழங்கி வருகின்றன.

>>>><<<<

வணிகர்களின் நலனுக்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் நடைபெற்ற வணிகர் நல வாரியத்தின் கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் உரையாற்றினார்.

(சவுண்ட் பைட் - ஸ்டாலின் 50 செகண்ட்ஸ்)

>>>><<<<

தமிழகத்தில் மின் கட்டண உயர்வை கண்டித்து, அஇஅதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

மாநிலம் முழுவதும் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டங்களில் அக்கட்சியைச் சேர்ந்த ஏராளமானோர் பங்கேற்றனர்.

>>>><<<<

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 9 பேர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

ராமேஸ்வரத்தைச் சேர்ந்த இந்த மீனவர்களை, சர்வதேச கடல் எல்லையை தாண்டியதாக கூறி, இலங்கை கடற்படை கைது செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கார்த்திகேயன் 42 செகண்ட்ஸ்)

>>>><<<<

இதற்கிடையே, இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

>>>><<<<

ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

தம்புலாவில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

>>>><<<<

2030ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் 16 அணிகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

ஆசிய ஒலிம்பிக் குழுமத்தின் தலைவராக இந்தியாவின் **Randhir Singh** ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

>>>><<<<